வலியுறுத்தப்பட்டது. காவிரிப்பிரச்சினையை நடுவர் தீர்ப்புக்கு விட வேண்டும் என்று தஞ்சை விவசாயிகள் சார்பில் உச்ச நீதி மன்றத்தில் ஒரு வழக்கு இருப்பதும், அந்த வழக்கில் தமிழக அரசு தன்னையும் இணைத்துக்கொண்டு நடுவர் தீர்ப்புக் கோரி வாதாடுவதும் இந்த அவை உறுப்பினர்கள் அறிந்த ஒன்றாகும். இந்தப் பிரச்சினையிலே உச்ச நீதிமன்றம் தனது முடிவினைத் தெரிவிப்பதற்கு — — ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் மத்திய அரசு, சம்பந்தப்பட்ட அரசுகளோடு கலந்து பேசி உச்ச நீதிமன்றத்திற்குத் தெரிவிக்க வேண்டும் என்று கெடு விதித்துள்ளது. எனவே, நான் தொடர்ந்து கூறும்போது கர்நாடக அரசு விரும்புவது போல் மீண்டும் ஒரு முறை பேச்சு வார்த்தை நடத்துவதற்கு நாங்கள் தயார்; ஆனால் அந்தப் பேச்சுவார்த்தை உச்ச நீதிமன்றம் கெடு விதித்துள்ள ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதிக்குள் நடைபெற்று ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும் என்று கூறினேன்.

என்னுடைய கருத்தை அனைவரும் ஏற்றுக்கொண்டதின் அடிப்படையில், வரும் 19 ஆம் தேதி மாலையில் தமிழக அரசின் சார்பில் நானும், கர்நாடக அரசின் சார்பில் வீரேந்திர பாட்டீல் அவர்களும், சென்னையிலேயே சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவது என்றும், இரு மாநில பேச்சு வார்த்தை வெற்றி பெறுமே யானால், அடுத்த நாளான 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று மாலை சென்னையிலே மத்திய அமைச்சர் கொட்டாடியா, கேரள, புதுவை மாநில முதல் அமைச்சர்களும் கலந்துகொண்டு தமிழக, கர்நாடக முதல்வர்களோடு பேசி, இறுதி முடிவு காண்பது என்றும் முடிவெடுக்கப்பட்டது என்பதை அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதனையொட்டி 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 19 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும், 1990 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் தேதி காலை சட்டமன்றத்திலே உள்ள அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்திலும் கலந்துரையாடி கருத்துக் களைப் பெறவிருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக்கொள் கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

(ஆ) நெய்வேலி பழுப்பு நிலக்கரி எடுப்பதற்காக ''ராயல்டி'' கொடுக்க மத்திய அரசு இசைவு தெரிவித்துள்ளது குறித்து.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடுத்து, நெய்வேலி யில் பழுப்பு நிலக்கரி எடுப்பதற்குக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை. நெய்வேலி பழுப்பு நிலக்கரி வாரியம் 1956 ஆம் ஆண்டிலிருந்து பழுப்பு நிலக்கரி எடுத்துக்கொண்டிருந்தாலும் அதற்காகக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை மாநில அரசுக்கு கொடுக்கப்படாமல் இருந்தது. ராயல்டிக்குப் பதிலாக

இலாபத்தில் ஒரு பங்கு கொடுப்பதாக தமிழக அரசுடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்திருந்தது. இந்த ஒப்பந்தம் 1976 இல் காலாவதியாகும் வரையில் இந்த வாரியம் இலாபம் சம்பாதிக்க வில்லை. அதன் பிறகு இலாபம் கிடைக்கும் கட்டம் வந்தபோது அந்த ஒப்பந்தத்தைப் புதுப்பிக்கவில்லை. அதே நேரத்தில், எடுத்த பழுப்பு நிலக்கரிக்கு ராயல்டியும் கொடுக்கவில்லை.

இந்த அரசு இப்போது பொறுப்பேற்ற பிறகு மத்திய அரசுடன் தொடர்புகொண்டு 1956 ஆம் ஆண்டு முதல் ராயல்டி கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்தியதின் பேரில் மத்திய அரசு நம்முடைய கோரிக்கையைப் பரிசீலிக்க ஏற்றுக்கொண் டிருந்தது. நான் நேற்று டெல்லி சென்றிருந்தபோது மத்திய அமைச்சர் திரு. ஆரிப் முகமது கான் அவர்களுடன் இது குறித்து பேச்சுவார்த்தை நடத்தி, ராயல்டி தொகைக்காக பழைய பாக்கி யைக் கொடுப்பதுடன், பாக்கித் தொகைக்கு வட்டியும் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். நம்முடைய கணக்கின் படி 1956 முதல் 1989 ஆம் ஆண்டு வரை நமக்குக் கொடுக்க வேண்டிய ராயல்டி தொகை 23.36 கோடி ரூபாய். இதில் ரூ. 7.09 கோடி தமிழ்நாடு மின்வாரியம் நெய்வேலி லிக்னைட் வாரியத்திற்குத் தரவேண்டிய தொகை என்று அவர்கள் கணக் கிட்டிருந்தார்கள். எனவே பாக்கித் தொகை 16.27 கோடி ரூபாய் தான் என்று முதலில் மத்திய அரசு சொல்லியிருந்தாலும் கூட அந்தத் தொகைக்கு வட்டி கொடுக்க வேண்டும் என்ற நம்மு டைய கோரிக்கையில் நியாயம் இருப்பதை நேற்று நான் நேரில் சந்தித்து வலியுறுத்தியதின்பேரில், அதனை ஏற்று நிகர மொத்த மாக ரூ. 30 கோடி கொடுப்பதற்கு மத்திய அமைச்சர் இசைவு தெரிவித்துள்ளார் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

12-20 மணி

இனிமேல் நடப்பு ஆண்டிலிருந்து டன் ஒன்றுக்கு 2 ரூபாய் 50 காசு ராயல்டி தொகையாகக் கொடுப்பதற்கும் ஒப்புக் கொண்டு இருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

3. தகவல் கோரல்——தொடர்ச்சி.

(இ) விவசாயிகளின் கூட்டுறவுக் கடன்களைத் தள்ளுபடி செய்வது பற்றி, முதலமைச்சர் டெல்லியில் நடத்திய பேச்சு வார்த்தை குறித்து—தொடர்ச்சி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர் களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர். திரு. வீரையன் அவர்கள் இங்கே ஒரு பிரச்சினை குறித்து கேட்டார்கள் ஏற்கெனவே இந்த அவையில் நம்முடைய வரவு-செலவுத் திட்ட பொது விவாதம் நடைபெற்ற நேரத்தில் நான் ஒன்றைக்குறிப்